முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2024 சனவரி

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advanced Financial Accounting & Costing)

2024-02-10
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் செவ்வை நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.5** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக..*

**1.1** கீழ்வருவனவற்றுள் கிரயக் கணக்கீடு தொடர்பான சரியான கூற்று எது?

(1) நடத்தைக்கு இணங்க, கிரயங்களை நேர் கிரயங்கள் எனவும் நேரில் கிரயங்கள் எனவும் வகைப்படுத்தலாம்.

(2) முதன்மைக் கிரயமானது நேரில் கிரயத்தை உள்ளடக்குகிறது.

(3) கிரய உறுதிப்படுத்தல் என்பது கிரயக் கணக்கீட்டின் ஒரு பிரதான நோக்கமாகும்.

(4) ஏற்கனவே செலவு செய்யப்பட்ட ஒரு கிரயம் அதிகரிக்கின்ற கிரயம் (incremental cost) என அழைக்கப்படுகிறது.

(02 புள்ளிகள்)

**1.2** ஓர் உற்பத்திக் கம்பனியான **வரையறுக்கப்பட்ட சண் கம்பனியின்** கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| மறு கட்டளைக் கணியம் | 4,500 அலகுகள் |
| கட்டளைக் காலம் | 4 - 6 வாரங்கள் |
| பயன்பாடு | 1,200 – 3,000 அலகுகள் |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், **வரையறுக்கப்பட்ட சண் கம்பனியின்** உயர்ந்தபட்ச இருப்பு மட்டம்:

(1) 18,000 அலகுகள். (2) 17,700 அலகுகள். (3) 22,000 அலகுகள். (4) 11,700 அலகுகள்.

(02 புள்ளிகள்)

**1.3** கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க:

**(a)** கம்பனிகள் பதிவாளருக்கு வருடாந்தத் திரட்டினைச் சமர்ப்பிப்பது கட்டாயத் தேவையாகும்.

**(b)** பங்குதாரர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை 02 ஆக இருத்தல் வேண்டும்.

**(c)** பணிப்பாளர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை 02 ஆக இருத்தல் வேண்டும்.

**(d)** பொதுமக்களுக்கு பங்குகளை விநியோகிக்க முடியாது.

மேலுள்ளவற்றுள், வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி தொடர்பில் சரியான கூற்று/ கூற்றுக்கள் :

(1) **(a)** மாத்திரம். (2) **(d)** மாத்திரம்.

(3) **(a)** யும் **(d)** யும் மாத்திரம். (4) **(a)** யும் **(b)** யும் **(d)** யும் மாத்திரம்.

(02 புள்ளிகள்)

**1.4** கீழ்வரும் தகவல்கள் 2024 சனவரி மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட சுசார கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| மாதத்திற்கான உண்மையான மேந்தலைக் கிரயம் | ரூபா 210,000/- |
| மாதத்திற்கான பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயம் | ரூபா 200,000/- |
| மாதத்திற்கான பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலம் | 10,000 மணித்தியாலங்கள் |
| மாதத்திற்கான உண்மையான இயந்திர மணித்தியாலம் | 12,000 மணித்தியாலங்கள் |

மாதத்திற்கான குறைவான அல்லது மேலதிக உறிஞ்சல் மேந்தலைக் கிரயமாக இருக்கக்கூடியது :

(1) ரூபா 30,000/- மேலதிக உறிஞ்சல். (2) ரூபா 30,000/- குறைவான உறிஞ்சல்.

(3) ரூபா 10,000/- மேலதிக உறிஞ்சல். (4) ரூபா 10,000/- குறைவான உறிஞ்சல்.

(02 புள்ளிகள்)

**1.5** கீழ்வருவனவற்றிலிருந்து சிக்கனக் கட்டளைக் கணியச் (EOQ) சூத்திரத்தில் பயன்படுத்தப்படும் ஓர் எடுகோளை (assumption) தெரிவுசெய்க:

(1) அலகொன்றிற்கான அறியப்பட்ட மற்றும் நிலையான விலையொன்று உள்ளது.

(2) வருடாந்தக் கேள்வி பற்றித் தெரியாது.

(3) இருப்பிலுள்ள சராசரி மீதியானது கட்டளைக் கணியத்தின் மூன்றிலொரு பங்காகும்.

(4) அலகொன்றிற்கான நிறுத்திவைத்தல் கிரயம் தெரியாது. (02 புள்ளிகள்)

**1.6** *கீழ்வரும் ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** அல்லது ***தவறானதா*** *என்பதைக் குறிப்பிடவும். உங்களுடைய விடைகளை (சரியானது / தவறானது) அதற்குரிய வினா இலக்கங்களுடன் உங்களுடைய விடைப் புத்தகத்தில் எழுதவும்* :

(1) LKAS 37 என்ற நியமத்தின்படி, நிகழத்தக்க பொறுப்பானது நிதிக் கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும்.

(2) LKAS 01 என்ற நியமத்தின்படி, வணிகமொன்றின் நிதிக் கூற்றுகள் நிச்சயமற்ற எதிர்கால காலப்பகுதிக்கு தொடர்ந்தியங்கும் என்ற எடுகோளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

(3) LKAS 02 என்ற நியமத்தின்படி, தொக்குகள் எல்லா நேரங்களிலும் கிரயத்தில் அளவிடப்பட வேண்டும்.

(4) LKAS 08 என்ற நியமத்தின்படி, ஒரு கம்பனி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனது கணக்கீட்டுக் கொள்கைகளை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது. (04 புள்ளிகள்)

**1.7** தொடக்கம் **1.10** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இன் இரண்டு (02) ஏற்பாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

**1.8** **சமன்** மற்றும் **அமல்** ஆகியோர் **SA அசோஷியேற்ஸ்** என்ற பங்குடமையின் பங்காளர்களாக இருப்பதுடன் அவர்கள் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். ஆண்டின் காலப்பகுதியில் **பிமல்** என்பவர் ஒரு பங்காளராக இணைந்து கொண்டதுடன், **சமன், அமல்** மற்றும் **பிமல்** ஆகியோருக்கிடையில் இலாபத்தை முறையே 3:2:1 என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**சமன்** மற்றும் **அமல்** ஆகியோரின் அர்ப்பணிப்பு விகிதத்தைக் (sacrificing ratio) **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

**1.9** கீழ்வரும் தகவல்கள் 2023 டிசெம்பர் மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | ரூபா 2,200,000/- |
| ஏனைய படிகள் | ரூபா 700,000/- |
| கடன் கழிப்பனவுகள் | ரூபா 97,000/- |
| தனியாள் முற்பண வருமான வரி (APIT) / PAYE கழிப்பனவுகள் | ரூபா 352,000/- |

ஊழியர் சேமலாப நிதியத்திற்காக (EPF), தொழில்தருநர் 12% பங்களிப்பை நல்குவதுடன் ஊழியர் பங்களிப்பாக 8% காணப்படுகிறது. மேலும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான (ETF) தொழில் தருநரின் பங்களிப்பு 3% ஆகும். EPF மற்றும் ETF என்பன ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் கணிப்பிடப்படுகின்றன.

2023 டிசெம்பர் மாதத்திற்காக **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனியால்** செலுத்தப்பட்ட நிகர சம்பளத்தை (Net Salary) **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

**1.10** LKAS 10 – அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் என்ற நியமத்தின்படி, சீராக்க நிகழ்வுகளுக்கு (adjusting events) மூன்று (03) உதாரணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

**ரமேஷ்** என்பவர் மளிகைப் பொருள்களை மொத்த விற்பனைச் சந்தையிலிருந்து வாங்கி ஒன்லைன் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள **E-குரோசறி** இன் தனியுடமையாளர் ஆவார். **ரமேஷ்** இனால் தொழிலுக்கமர்த்தப்பட்ட விநியோகப் பணியாளரால் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. பொருள்களை விநியோகிக்கும்போது அதற்கான கொடுப்பனவுகளை வாடிக்கையாளர்கள் காசாக அல்லது கடனட்டை மூலம் மேற்கொள்ளலாம்.

**E-குரோசறி** இன் சொத்துக்களும் பரிப்புக்களும் கீழே தரப்பட்டுள்ளன :

*(ரூபா)*

| ஆந் திகதியில் | 31.03.2023 | 01.03.2023 |
|---|---|---|
| மோட்டார் சைக்கிள் - முன்கொணரற் பெறுமதியில் | 145,000 | 159,000 |
| அலுவலக உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 70,000 | 75,000 |
| தொக்குகள் | ? | 240,000 |
| கடனட்டை வருமதிகள் | ? | 55,000 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 316,850 | 95,000 |
| அட்டுறு செலவினங்கள் | ? | 0 |

2023 மார்ச் மாதத்திற்கான கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) மாதத்தின் காலப்பகுதியில் ரூபா 560,000/- இற்கு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அனைத்து கொள்வனவுகளும் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

(2) மாதத்தின் காலப்பகுதியில் ரூபா 770,000/- இற்கு விற்பனைகள் செய்யப்பட்டிருந்ததுடன், மாதத்தின் காலப்பகுதியிலான அனைத்து விற்பனைகளுக்கும் விற்பனை விலையில் 20% மொத்த இலாப எல்லையை **ரமேஷ்** பேணியுள்ளார். 40% விற்பனைகள் கடனட்டை ஊடாகவும் மீதி விற்பனைகள் காசு அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டன. மாதத்தின் காலப்பகுதியில் கடனட்டை வருமதிகள் மீது வங்கியிலிருந்து ரூபா 344,850/- சேகரிக்கப்பட்டது.

(3) ஒவ்வொரு மாத இறுதியிலும் விநியோகப் பணியாளருக்கு மாதாந்தச் சம்பளமாக ரூபா 25,000/- இனை **ரமேஷ்** செலுத்துகிறார்.

(4) 2023 மார்ச் மாதத்திற்கான நீர் மற்றும் மின்சாரச் செலவினங்களாக ரூபா 6,500/- காணப்பட்டதுடன் அவை உடன் அடுத்துவருகின்ற மாதத்தில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

(5) மாதத்தின் கால்பகுதியில் எவ்வித ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கொள்வனவுகளோ விற்பனைகளோ இடம்பெறவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **E-குரோசறியின்** 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான நிகர இலாபத்தைக் **கணிக்குக.**

(07 புள்ளிகள்)

(b) **E-குரோசறியின்** 2023 மார்ச் 31 இலான மூலதன (உரிமையாண்மை) மீதியைக் **கணிக்குக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

சர்வதேசச் சந்தைக்கு கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்யும் வணிகத்தில் ஈடுபடுகின்ற **சிலோன் கைத்தறிகள்** என்ற பங்குடமையின் பங்காளர்களாக **ஹஷித், விஷித்** மற்றும் **நெஷித்** ஆகியோர் உள்ளனர்.

(1) பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றை வழங்குகிறது :

- **ஹஷித், விஷித்** மற்றும் **நெஷித்** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 2:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர்.
- **ஹஷித், விஷித்** மற்றும் **நெஷித்** ஆகியோர் முறையே ரூபா 50,000/-, ரூபா 75,000/- மற்றும் ரூபா 125,000/- என்ற அளவுகளிலான மாதாந்தச் சம்பளத்தைப் பெற உரித்துடையவர்கள்.
- 2023 சனவரி 01 இல் உள்ள மூலதன மீதிகளுக்கு பங்காளர்கள் 5% மூலதன வட்டியைப் பெற உரித்துடையவர்கள்.
- பங்குடமைக்கு பங்காளர்கள் வழங்கிய கடன்கள் மீது அவர்களுக்கு ஆண்டிற்கு 15% வட்டியைப் பெற உரித்துள்ளது.

(2) 2023 சனவரி 01 இல் பங்காளர்களின் மூலதனக் கணக்கு மீதிகள் மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகள் என்பன கீழே தரப்பட்டுள்ளது :

| | **மூலதனக் கணக்குகள் (ரூபா)** | **நடைமுறைக் கணக்குகள் (ரூபா)** |
|---|---|---|
| **ஹஷித்** | 2,000,000 (செலவு மீதி) | 150,000 (செலவு மீதி) |
| **விஷித்** | 2,500,000 (செலவு மீதி) | 300,000 (வரவு மீதி) |
| **நெஷித்** | 3,000,000 (செலவு மீதி) | 800,000 (செலவு மீதி) |

(3) 2023 யூலை 01 இல் **ஹஷித்** பங்குடமைக்கு ரூபா 1,000,000/- கடன் வழங்கியிருந்ததுடன் ஆண்டிற்கான வட்டி இன்னும் கணக்கிற் கொள்ளப்படவில்லை. கடனின் மீள்கொடுப்பனவுகள் 2024 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கின்றன.

(4) பங்குடமை வணிகமானது **விஷித்** இற்குச் சொந்தமான கட்டடமொன்றில் இயங்குவதுடன், அவருக்கு மாதாந்த வாடகையாக ரூபா 50,000/- செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வாடகை, ஆண்டின் காலப்பகுதியில் அவருக்குச் செலுத்தப்பட வில்லை என்பதுடன் அந்தச் செலவினம் கணக்கேடுகளில் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(5) 2023 மே 01 இல் **நெஷித்** ரூபா 1,500,000/- இனை எடுத்திருந்தார் (drawing).

(6) 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான, மொத்தப் புரள்வு ரூபா 30,000,000/- ஆக இருந்த அதே வேளை நிகர இலாபம் ரூபா 8,000,000/- ஆக இருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சிலோன் கைத்தறிகள்** நிறுவனத்திற்காக கீழ்வருவன வற்றைத் **தயாரிக்குக** :

(a) இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கு. (05 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள். (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**நீரோகா மருத்துவக் கழகம்** என்பது தேவையுடையோர் மற்றும் வயதானவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக மருத்துவர்கள் குழு ஒன்றினால் உருவாக்கப்பட்ட இலாப நோக்கற்ற ஒரு நிறுவனமாகும்.

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

(1) 2023 மார்ச் 31 இல், கழகம் 150 மருத்துவர்களைக் கொண்டிருந்ததுடன் மருத்துவர் ஒருவருக்கான வருடாந்த அங்கத்துவச் சந்தா ரூபா 20,000/- ஆகும். இந்த 150 பேரில் 10 மருத்துவர்கள் ஆண்டின் காலப்பகுதியில்தான் இணைந்து கொண்டவர்கள் என்பதுடன் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குமான வருடாந்த சந்தாக் கொடுப்பனவுகளையும் செலுத்தியிருந்தனர்.

(2) கழகத்தின் சொத்துகளும் பரிப்புகளும் கீழ்வருமாறு :

*(ரூபா)*

| ஆந் திகதியில் | 31.03.2023 | 01.04.2022 |
|---|---|---|
| மருத்துவ உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 2,790,000 | 3,000,000 |
| நிலுவையாகவுள்ள அங்கத்துவச் சந்தா | 80,000 | 20,000 |
| முற்பணமாகவுள்ள அங்கத்துவச் சந்தா | 400,000 | - |
| தொக்குகள் (சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருள்களும் மருந்துகளும்) | 1,255,000 | 255,000 |
| அட்டுறு செலவினங்கள் - மின்சாரம் | 11,000 | 9,000 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | ? | 5,890,000 |

(3) ரூபா 150,000/- பெறுமதியான சத்திரசிகிச்சைக்கான நுகர்வுப் பொருள்களும் மருந்துகளும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் கழகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டன. அத்துடன், ரூபா 7,200,000/- பெறுமதியான சத்திரசிகிச்சைக்கான நுகர்வுப் பொருள்கள் ஆண்டின் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டன.

(4) ரூபா 300,000/- கிரயமான மருத்துவ உபகரணம் ஆண்டின் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டது.

(5) கழக நடவடிக்கைகளுக்காக இரண்டு மருத்துவத் தாதிகள் பணியாற்றுவதுடன் அவர்களுக்கு அந்த நாளின் இறுதியில் மணித்தியாலத்திற்கு ரூபா 200/- என்ற அடிப்படையில் செலுத்தப்படுகிறது. ஆண்டின் காலப்பகுதியில், கழக நடவடிக்கைகளில் தாதியர்கள் 1000 மணித்தியாலங்களைச் செலவிட்டிருந்தனர். மருத்துவர்கள் கழக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக எவ்வித ஊதியத்தையும் பெற உரித்துடையவர்கள் அல்லர்.

(6) மின்சாரத்திற்காக ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 96,000/-. மாதமொன்றுக்கான கட்டட வாடகை ரூபா 10,000/- என்பதுடன் அது அந்தந்த மாதத்திலேயே செலுத்தப்பட வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **நீரோகா மருத்துவக் கழகத்தின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) கொள்ளல், கொடுத்தல் கணக்கு. (04 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு. (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட சண்ஹில் (தனியார்) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளன. இக்கம்பனி இரண்டு உற்பத்திப் பிரிவுகளையும் ஒரு சேவைப் பிரிவையும் கொண்டிருக்கிறது.

(1) 2024 மார்ச் மாதத்திற்கான கம்பனியின் பாதிடப்பட்ட உற்பத்தி மேந்தலைகள் கீழ்வருமாறு இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது :

| | ரூபா |
|---|---|
| மின்சாரம் | 380,000 |
| வாடகை | 368,500 |
| ஊழியர் சேமநலன் | 69,000 |
| ஊழியர்கள் மேற்பார்வை | 138,000 |
| இயந்திரம் மீதான தேய்மானம் | 154,700 |
| | **1,110,200** |

(2) 2024 மார்ச் மாதத்திற்கான கீழ்வரும் பாதிடப்பட்ட தரவுகள் தரப்பட்டுள்ளன :

| | உற்பத்தி | | சேவைப் பிரிவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | பிரிவு 1 | பிரிவு 2 | | |
| நேரில் பொருள்கள் (ரூபா) | 575,000 | 485,000 | 340,000 | 1,400,000 |
| ஊழியர் எண்ணிக்கை | 28 | 13 | 5 | 46 |
| இயந்திரத்தின் கிரயம் | 8,960,000 | 4,810,000 | 1,700,000 | 15,470,000 |
| மின்சாரப் பாவனை (கிலோவாற்று) | 2,800 | 1,523 | 427 | 4,750 |
| பயன்படுத்தப்பட்ட தரைப் பரப்பு (சதுர அடி) | 3,700 | 1,550 | 250 | 5,500 |
| நேர் கூலி மணித்தியாலம் | 4,000 | 2,000 | - | - |
| கிரயப் பகிர்வு - சேவை | 55% | 45% | - | - |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேந்தலைகள் ஒவ்வொரு பிரிவுக்கும் எவ்வாறு ஒதுக்கப்பட்டு, பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் கூற்றினைத் **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) நேர் கூலி மணித்தியாலங்களை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(a) கீழ்வரும் தகவல்கள் ***வரையறுக்கப்பட்ட* XYZ *கம்பனியின்*** பணி இல. **RMX600** உடன் தொடர்புடையதாகும் **:**

| | |
|---|---|
| நேர் மூலப்பொருள் | 3,800 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 1,600/- |
| நேர் கூலி – பிரிவு I | 250 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 2,000/- |
| – பிரிவு II | 400 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்றுக்கு ரூபா 1,800/- |
| உற்பத்தி மேந்தலை | மொத்த நேர் கூலிக் கிரயத்தில் 150% |

கம்பனியானது விற்பனை விலை மீது 25% இலாபத்தைப் பேணுகிறது.

***நீங்கள் செய்ய வேண்டியது* :**

பணி இல. **RMX600** மீது வசூலிக்கப்பட வேண்டிய விலையைக் ***கணிக்குக.*** (05 புள்ளிகள்)

(b) ***வரையறுக்கப்பட்ட தருஷி கார்மென்ட்ஸ் (தனியார்) கம்பனி*** என்பது ஆடைத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றாகும்.

ஊழியர் ஒருவரின் கடந்த வாரத்துடன் தொடர்புடைய கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| நாளொன்றுக்கான சாதாரண வேலை மணித்தியாலம் | 8 மணித்தியாலங்கள் (வாரமொன்றுக்கு 5 வேலை நாட்கள்) |
| மணித்தியாலம் ஒன்றுக்கான அடிப்படைக் கூலி வீதம் | ரூபா 300/- |
| ஒரு மேலாடையைத் தயாரிக்க அனுமதிக்கப்பட்ட நியம காலம் | 15 நிமிடங்கள் |
| உபகாரத் கொடுப்பனவு (bonus) | அடிப்படைக் கொடுப்பனவில் சேமிக்கப்பட்ட காலத்தில் 80% |
| கடந்த வாரத்தில் ஊழியர் 275 மேலாடைகளைத் தயாரித்துள்ளார். | |

***நீங்கள் செய்ய வேண்டியது* :**

கடந்த வாரத்திற்கான ஊழியரின் மொத்த உழைப்பைக் (total earnings) ***கணிக்குக.*** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

2023 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட குளோபல் டிரேடிங் (தனியார்) கம்பனியின்** பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது :

| | வரவு (ரூபா '000) | செலவு (ரூபா '000) |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (1,000,000 சாதாரண பங்குகள்) | | 5,000 |
| கைக்கொள் இலாபம் - 2022 ஏப்ரல் 01 இல் | | 9,550 |
| **பொறி** மற்றும் **உபகரணம் - கிரயத்தில் :** | | |
| மோட்டார் வாகனங்கள் | 12,000 | |
| அலுவலக உபகரணம் | 14,355 | |
| **திரண்ட தேய்மானம் - 2022 ஏப்ரல் 01 இல் :** | | |
| மோட்டார் வாகனங்கள் | | 3,671 |
| அலுவலக உபகரணம் | | 8,611 |
| மோட்டார் வாகன விற்பனைக் கணக்கு | | 3,500 |
| வங்கி மீதி | 8,201 | |
| வியாபார வருமதிகள் | 8,290 | |
| வியாபார சென்மதிகள் | | 3,219 |
| விற்பனை | | 38,325 |
| விற்பனைக் கிரயம் | 12,694 | |
| 2023 மார்ச் 31 இல் தொக்கு – கிரயத்தில் | 4,350 | |
| நீர் மற்றும் மின்சாரம் | 136 | |
| போக்குவரத்துச் செலவினங்கள் | 459 | |
| விளம்பரப்படுத்தல் செலவினங்கள் | 1,182 | |
| விற்பனைப் பணிசை (தரகு) செலவினங்கள் | 1,526 | |
| அலுவலகப் பராமரிப்பு | 381 | |
| சம்பளங்கள், கூலிகள், EPF மற்றும் ETF | 10,339 | |
| வங்கிக் கட்டணங்கள் | 16 | |
| அலுவலக வாடகை | 725 | |
| இடைக்காலப் பங்கிலாபங்கள் | 1,800 | |
| ஏனைய நிருவாகச் செலவினங்கள் | 304 | |
| ஐயக்கடன் ஏற்பாடு - 2022 ஏப்ரல் 01 இல் | | 207 |
| செலுத்திய வருமான வரி | 1,450 | |
| செலுத்த வேண்டிய EPF மற்றும் ETF | | 125 |
| வங்கிக் கடன் (ஆண்டிற்கு 20% வட்டி) | | 6,000 |
| | **78,208** | **78,208** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2023 மார்ச் 31 இல் தொக்குகளின் நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ரூபா 4,275,000/-.

(2) 2021 சனவரி 01 இல், ரூபா 3,000,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மோட்டார் வாகனம் 2022 டிசெம்பர் 31 இல் ரூபா 3,500,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனை வருமானமானது மோட்டார் வாகன விற்பனைக் கணக்கிற்கு செலவுப் பதிவு (credited) செய்யப்பட்டதைத் தவிர மோட்டார் வாகன விற்பனை தொடர்பில் வேறெந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதே தினத்தில் ரூபா 4,500,000/- கிரயத்தில் ஒரு புதிய மோட்டார் வாகனம் வாங்கப்பட்டதுடன் அது சரியாக மோட்டார் வாகனக் கணக்கிற்கு வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டது.

(3) பொறி மற்றும் இயந்திரங்கள், கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலங்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 4 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 5 ஆண்டுகள் |

(4) 2023 மார்ச் 31 இல் கீழ்வரும் முற்கொடுப்பனவுகளும் அட்டுறுக்களும் சீராக்கம் செய்யப்பட வேண்டும் :

| | ரூபா |
|---|---|
| முன்செலுத்திய வாடகை | 175,000 |
| அட்டுறு மின்சாரம் | 25,000 |

(5) வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான வருமான வரிப் பரிப்பாக ரூபா 2,560,000/- இருக்குமென மதிப்பிடப்பட்டது. ஆண்டின் காலப்பகுதியில் வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான வருமான வரியாக ரூபா 1,450,000/- செலுத்தப்பட்டுள்ளது.

(6) வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து நிலையை அடைந்ததன் காரணமாக அவரிடமிருந்து வரவேண்டிய ரூபா 400,000/- இனை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. மேலும், 2023 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியில் 5% ஐயக்கடன் ஏற்பாட்டைச் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

(7) கம்பனியானது மூலதனத் தொகையை செலுத்துவதற்கான ஒரு வருட சலுகைக் காலத்துடன் 2023 சனவரி 01 இல் வங்கிக் கடனொன்றைப் பெற்றிருந்தது. எனினும், கம்பனி ஆண்டிற்கான வட்டியைச் செலுத்தியிருக்கவில்லை.

(8) நிதிக் கூற்றுகள் வழங்கப்படுவதற்காக 2023 யூன் 30 இல் பணிப்பாளர் சபையால் அதிகாரமளிக்கப் பட்டன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

முகாமையின் பயன்பாட்டிற்காக, **வரையறுக்கப்பட்ட குளோபல் டிரேடிங் (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (13 புள்ளிகள்)

(b) 2023 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |